Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 15 உ திங்கட்கிழமை (01 - 10 - 1990) ஹிஜ்ரீ 1411 ரபி. அப். 11 ஓசை 226

## தேசியக் கொடியை இராணுவம் அவமதிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தேசியக்கொடியின் கிழிந்த - சிதைந்த பகுதிகள் குருநகர் - பண்ணைக் கடற்கரையோரங்களில் கடலலைகளால் ஒதுக்கப்பட்டுள்ளன. மண்டைதீவிலும், கோட்டையிலும் இருந்து வெளியேறிய இராணுவத்தினரே தேசியக் கொடிகளை சிதைத்தும், கிழித்தும் கடலினுள் வீசியெறிந்துள்ளனர் (4ஆம் பக்கம் பார்க்க)

### மயிலிட்டி, தையிட்டி, கட்டுவன் பகுதியில்

# விமானங்கள் குண்டு வீச்சு; புலிகள் - இராணுவம் மோதல்

## பல வீடுகள், கடைகள் சேதம்; மூன்று படையினர் பலி!

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்றும், நேற்றுமுன் தினமும் பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் தாக்குதலை மேற்கொண்ட அதேவேளை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறுவதாகவும் தெரிகின்றது.**

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான மாசெட்டி குண்டுவீச்சு விமானங்களும் வை 12 ரக பாரிய விமானங்களும் இத் தாக்குதலை மேற்கொண்டன.

இரு நாட்கள் இடம்பெற்ற இவ் விமானத் தாக்குதல்கள் தையிட்டி, மயிலிட்டி, கட்டுவன் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதலினால் பல வீடுகளும், கடைகளும் சேதமடைந்துள்ளன.

அதேவேளை சில பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வசாவிளானில் சிறிலங்கா காவல் அரண்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அருள்-89 தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் இறந்ததாகவும் தெரியவருகின்றது.

இப்பகுதிகளில் இருந்து மக்கள் ஏற்கனவே வெளியேறி விட்டமையால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை என நம்பப்படுகின்றது.

"ஈழநாதம்" பத்திரிகையின் செய்தி நிருபர்கள் அனைவரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு ஈழநாதம் காரியாலயத்திற்கு வரும்படி அழைக்கப்படுகின்றீர்கள். ஆ-ர்

## நகருக்கு மக்கள் திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தினமும் பெருந்தொகையான மக்கள் யாழ்நகர்நோக்கி திரும்பிக்கொண்டிருக்கின்றனர். கடந்த இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற ஏராளமான மக்கள் சைக்கிள்களிலும் மாட்டுவண்டிகளிலும் தமது பெட்டி படுக்கைகளுடன் மீண்டும் திரும்பிக்கொண்டிருப்பதை நகரெங்கிலும் வீதிகளில் காணக்கூடியதாக உள்ளது. (லோ)

## நாங்களும் புலிகளே!

(கிளிநொச்சி)

கலை, கலாசாரப் பேரவையினரின் 'நாங்களும் புலிகளே' என்னும் தெருக்கூத்து நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் உருத்திரபுரம் அம்மன்கோயில் முன்பாக நடைபெற்றது. சிற்றூர் அவை உறுப்பினர் கணேசதாசன் அவர்களின் தலைமையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஸ்கந்தபுரம் பகுதிப் பொறுப்பாளர் வில்வம் அவர்களின் முன்னிலையில் இந் நிகழ்ச்சி இடம் பெற்றது.

## வைத்தியசாலை சிற்றூழியர் அசிரத்தைநோயாளர்அவதி

(மானிப்பாய்)

மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலைப் பிரிவில் கடமை புரியும் சிற்றூழியர்களின் வரவு மிகவும் குறைவாக இருப்பதுடன் கடமைக்குவருபவர்களும் கடமையில் அசிரத்தையுடன் நடப்பதாகவும் தெரிகிறது.

இதனால் வைத்தியசாலையில் சுகாதார சீர்கேடுகள் அதிகரித்துள்ளது. மலசலகூடங்கள், குப்பைத்தொட்டிகள் போன்றவற்றை துப்பரவு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினால் இப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. இப்பகுதியில்இருவாரங்களாக தொற்றுநீக்கிகள் எதுவும் தெளிக்கப்படவில்லை. இதனால் தொற்று நோய்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 45நாட்கள்சித்திரவதையின்பின் 25 இளைஞர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினரால் கடந்த நாற்பத்தைந்து நாட்களாக தடுத்து வைக்கப்பட்டு கடுமையான சித்திரவதையின்பின் யாழ், மாவட்டத்தைச் சேர்ந்த இருபத்தைந்து இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தற்பொழுது இவர்கள் அனைவரும் பேசாலை தேவா (4 ஆம் பக்சம் பார்க்க)

### கிராமசேவையாளர்கள் வாராவாரம்

## உயிர், உடைமை சேதங்களை சமர்ப்பிக்கப் பணிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் முதல் விமானத்தாக்குதல், துப்பாக்கிச் சூடு, ஷெல் தாக்குதல் போன்றவற்றால் அண்மைக் காலமாகவும், முன்பு ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள், காயமடைந்தது, உடைமைகள் சேதமாக்கப்படுதல் போன்ற சகல விபரங்களையும் ஒவ்வொரு வாரமும் அறிக்கையாகச் சமர்ப்பிக்குமாறு இப்பகுதியில் உள்ள சகல கிராம சேவையாளர்களுக்கும் யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களினால் பணிக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து ஒழுங்குகளை மீறியவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டத்திற்குச் செல்வதில் போக்கு வரத்து தொடர்பகத்தால்அமுலுக்குக்கொண்டுவரப்பட்ட சில ஒழுங்கு முறைகளை மீறியவர்களிடமிருந்து பெருந்தொகைப் பணம் தண்டமாகப் பெறப்பட்டுள்ளதுடன் கடுமையான எச்சரிக்கையின்கீழ் விடுதலை செய்யப்பட்டுமுள்ளனர்.

நேற்றுக்காலை இந்த ஒழுங்கு முறைகளை மீறிய எட்டு ஆண்கள், பத்துப் பெண்கள் இரண்டு சிறுவர்கள் என இருபது பேர் உள்ளூர் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்டவர்களில் வைத்தியர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் என பலதரப்பினரும் அடங்கியிருந்தனர்.

இந்த விடுவிப்புநிகழ்ச்சியின் பின்னர் பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தில் அதன்பொறுப்பாளர் சலீமால் ஒரு பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்பட்டது. இந்த மாநாட்டில் சிலமுக்கியவிடயங்களை அவர் மக்களுக்குத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை சிதறடிக்க நினை (4ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டி முகாம் பகுதி இராணுவத்தினரால் அழிப்பு

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி கிராமத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் தமது முகாமைக் காலி செய்து புறப்பட்டுச் செல்லும் போது முகாம் இருந்த பகுதியை முழுமையாக நாசம் செய்து விட்டுச் சென்றுள்ளனர்.

பராசக்தி வித்தியாலயமும் அதனை அண்டியிருந்த வீடுகள் உட்பட பல வீடுகளும் இராணுவ நடவடிக்கைகளினால் சிதைக்கப்பட்டுள்ளன. தோட்டங்களில் பயிர்களுடன் வேலிகளும் அழிக்கப்பட்டு காணப்படுகிறது. பனைகளும், தென்னைகளும் தறித்து வீழ்த்தப்பட்டிருப்பதுடன், (4 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் வீடுகளில் கதவுடைத்துத் திருட்டு

(விஷேட நிருபர்)

குருநகரில் வீட்டுக் கதவுகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானத் தாக்குதலால் கதவுகள் திறந்த வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வந்தது தெரிந்ததே.

அதன் பின்பாக மூடிக்கிடந்த வீட்டுக் கதவுகளையும் உடைத்துத் திருடர்கள் பொருட்களைச் சூறையாடி இருப்பது இப்பொழுது தெரிய வந்துள்ளது.

யாழ். கோட்டை இராணுவம் ஓடிய பின்பு, பல நாட்களின் பின்பாக வீடுகளைப் பார்க்கப் போனவர்கள் வீட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

பயிர்களைத் தாக்கும் பீடைகள், பூச்சிகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க உதவும் இயற்கை பூச்சிநாசினி வேப்பெண்ணெய்.

ஒரு போத்தல் ரூபா 80/- மட்டுமே. கொள்கலன் கொண்டு வரவும்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்.

(B/ 1440)

### நீமியா உரம்

அண்ணா கோப்பி - இணுவில், திருநெல்வேலி கடைகளில் விற்கப்படுகிறது.

(B/1439) - மில்க்வைற்.

### இடமாற்றம்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14, கஸ்தூரியார் வீதியிலிருந்து இல. 12, பொன்னையா லேன், ஆறுகால்மடம். ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(B - 1370)

### 'நிலவே நீ மயங்காதே'

மீராவெளியீடு ''இந்திரா பிரியதர்ஷினி'' எழுதியது 40/ ரூபா தவிக்கும் பெண்மனம். தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண் மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள் துர்க்கா ஸ்ரேசனேர்ஸ். சுன்னாகம். திருக்கணிதம் சாவகச்சேரி, சிறிகாந் புத்தகசாலை நல்லூர்

(R/675)

### டில்கா வாச் வேக்ஸ் (Dilka Watch Works)

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும் |உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்றொனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு

(B–1444)

### தவறிவிட்டது

துரைசிங்கம் தர்மகுலசிங்கம் ஆகிய எனது அடையாள அட்டையும் (இல: 520 133160V) வாகன லைசென்சும் (இல:DL 319626) விளான் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். அம்பலவாணர் வீதி உடுவில் கிழக்கு சுன்னாகம்.

(R-680)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மற்றும் தென் இலங்கையில் கடமையாற்றும் அரசாங்க வங்கி ஊழியர்கள் யாழ்ப்பாணம் வந்து திரும்பவும் தமது அலுவலகங்களில் கடமைக்குச் சமுகமளிக்க முடியாத நிலையில் உள்ளனர். இவர்கள் நிலைமை பற்றி உரிய அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறுவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் சகலரும் மேற்படி கூட்டத்தில் சமுகமளிக்கும்படி த. விநாயகமூர்த்தி வேண்டியுள்ளார்

## அரச அதிபர் வேண்டுகோள்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச திணைக்களப் பணியாட்களும் தத்தமது திணைக்களங்களுக்கு எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் கடமைக்கு சமுகமளிக்குமாறு மன்னார்மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## லக்ஷ்மி ரேட் சென்ரர்

சுன்னாகம் நவீன சந்தைக்கு முன் லக்ஷ்மி ரேட் சென்ரரில் வெளிநாட்டு நாணயம் நிதானமான விலையில் மாற்றலாம். பொதுமக்கள் நன்மை கருதி பாதுகாப்பாகவும் மாற்றலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

(B- 1445)

## உப்பள ஊழியர்களுக்கு நான்குமாத சம்பளமில்லை

(கொழும்புத்துறை)

குறிஞ்சாத்தீவு உப்பளம் ஆனையிறவு அலுவலகத்தில் கடமையாற்றும் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட நிரந்தர, தற்காலிக ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை என இங்கு கடமையாற்றும் ஊழியர் ஒருவர் எமது நிருபருக்கு தெரிவித்துள்ளார்.

இவ் அலுவலகத்தைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் செப்டெம்பர் மாதம் முற்பணமாக ரூபா 750 மட்டும் காசோலையாக வழங்கப்பட்டுள்ளது.

வங்கிகள் செயல் படாததால் இக்காசோலையையும் மாற்றமுடியாது இவ் அலுவலகத்தைச் சேர்ந்த அனேக ஊழியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாகக் கூறியுள்ளார். (24

## 31ஆம் நாள் அஞ்சலி



தாயின் மடியில் 02 - 03 - 1975

தாயக மீட்பில் 01 - 09 - 1990

முல்லைத்தீவில் நேரடி மோதலில்
வீரமரணமடைந்த வீரவேங்கை

### சிவலோகநாதன் சுஜீகரன்

(றணீஸ்)

(யா / செங்குந்த இந்துக் கல்லூரி மாணவன்)

அன்புமழை பொழிந்தாய், ஆர்வம்தனை வளர்த்தாய்
இன்ப வடிவாய் இலங்கினாய்!
மாணவனாய், சிறந்த சாரணனாய்
எல்லோர் மனத்திலும் நிலைத்திருந்தாய்
முல்லையில் துன்பக்கடலாட விட்டுக் கடுகி
உடலோடு போமோ உறவு? [வழிநடந்தாய்!

அமரனின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

ஆடியபாத வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

அவரது குடும்பத்தினர்
உறவினர், நண்பர்கள்

(R. 681)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்

23 - 01 - 1972



வீர மரணம்

01- -09 1990

### 2-வது லெப். கனோஜி

(பா. கமலநாதன்)

புளியம்பொக்கணை - பரந்தன்

நாம் இல்லா நாடும் இல்லை
நாம் இருக்க நாடும் இல்லை
தமக்கு என்றொரு நாடு வேண்டி
நாள் முழுதும் போராடி
நமக்கு என்று நாடு அமைப்போம்.

முல்லைத்தீவு இராணுவ முகாம் நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

மற்றும் இவருடன் வீரமரணமடைந்த ஏனைய 36 போராளிகளுக்கும் எமது வீர வணக்கம்.

— குடும்பத்தினர்

(B- 1441)

## றாஜு ஸ்ரோர்ஸ்

யாழ். 67, 69, கஸ்தூரியார் றோட்டில் அமைந்த எமது ஸ்தாபனம் ஒரு பகுதி நல்லூர் கந்தன் முன்பாக பொதுமக்கள் நன்மை கருதி இயங்குகின்றது. வேறு கிளைகள் வேறு எப்பகுதியிலும் இல்லை என்பதை அறியத் தருகிறோம்.

(B.1446)

## அறிவித்தல்

### MOHAMEDI GRINDING MILLS & STORES

777, K. K. S. Road, Jaffna (Sri Lanka)

வாடிக்கையாளர்களே! வியாபாரிகளே!

எமது ஸ்தாபனம் 777, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் பழைய முகவரியிலேயே தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருப்பதனால் தங்கள் கொடுப்பனவுகளை மேற்படி விலாசத்திலுள்ள எமது ஸ்தாபனத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

எம். ஜி எம்.
777, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

M.G.M.
777, K.K.S. ROAD,
JAFFNA.

(B/1443)

## வீர அஞ்சலி

தாயின் மடியில் 25 — 02 — 1972



தாயக மீட்பில் 01 — 09 — 1990

முல்லைத்தீவில் இடம்பெற்ற
நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### 2ஆம் லெப். அசோக்

(மகாலிங்கம் இதயச்சந்திரன்)

இதயத்துள் கனலும் — ஈழ
விடுதலை உணர்வு உந்த
உதய ஞாயிறாய் — நீ
உதித்தனை இளைய வேங்கை

எதிரியின் சுவடு எங்கள்
ஈழமண் மீது கண்டால்
குதறிடப் பாயும் வேங்கை
கூட்டத்தில் நீயு மானாய்

முல்லையில் நடந்த மோதல்
முடிவிலே தாயகத்தின்
மடியிலே தலையைச் சாய்த்தாய்
மறவனாய் நிலைத்து நிற்பாய்!

— தமிழீழ மக்கள்

(B. 1434)

## சிந்தனைக்கு

துணிவு வளர்வது எண்ணிக்கையில் இருந்து அல்ல, இதயங்களில் இருந்துதான்.

- ஜான் ட்றைடன்


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 01-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## மீண்டும் ஒருமுறை...

யாழ். கோட்டை இராணுவமுகாமில் இருந்து சிறிலங்கா இராணுவத்தை விரட்டியடித்ததின் மூலம் மீண்டும் ஒரு முறை சிறிலங்கா இராணுவத்திற்கும், உலகிற்கும் விடுதலைப்புலிகள் தமதுமனோபலத்தைக்காட்டியுள்ளனர்.

எதிரியின் ஆட்பலத்தையும், ஆயுத பலத்தையும் விட குறைந்தளவு நிலையில் இருந்து கொண்டு எதிரியைக் கோட்டையைவிட்டுவிரட்டியடித்துள்ளனர். இது அவர்களின் மனோபலம் தவிர வேறொன்றுமில்லை.

சிறிலங்கா அரசாங்கம் யாழ், கோட்டை இராணுவ முகாம்முற்றுகையைமுறியடித்து யாழ் நகரைக்கைப்பற்றும் நடவடிக்கைக்காக தனது முப்படைகளின் பெரும்பலத்தைப் பாவித்தது இவ் இராணுவ நடவடிக்கை இதுவரை சிறிலங்கா ஆயுதப்படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் யாவற்றிலும் பெரிதாகும்.

நான்காயிரத்திற்கு மேற்பட்ட விசேட பயிற்சி பெற்ற, நவீன ஆயுதங்களையும், பாதுகாப்புக்கவசங்களையும் கொண்ட இராணுவம், நாற்பதிற்கு மேற்பட்ட கடற்படைப் பீரங்கிப் படகுகள், இருபது பீரங்கிப்படைப் பிரிவுகள், விமானப்படையின் முழுமையானகுண்டுவீச்சுவிமானங்கள், பீரங்கி பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்கள் ஆகியவை இத் தாக்குதலின் போது பயன்படுத்தப்பட்டன.

சிறிலங்கா இராணுவ பலத்தை மட்டும் இந்தயுத்தத்தில் பாவிக்கவில்லை அரச இயந்திரத்தை முழுமையாகவே இந்த யுத்தத்தின் மீது திருப்பியிருந்தது. வானொலி தொலைக்காட்சி என்பன தமிழ் மக்களினதும் விடுதலைப்புலிகளின் மனோபலத்தைச் சிதறடிக்கவும் குழப்பத்தில் ஆழ்த்தவும், பகீரதப் பிரயத்தனம் செய்தன.

சிறிலங்கா அரசின்முப்படைகளின் கண்மூடித்தனமான தாக்குதலை இன்று கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளையும், யாழ். நகர்பகுதியையும் சென்று பார்ப்பவர்களுக்குப் புரியும்.

வீடுகள், கடைகள், ஆஸ்பத்திரிகள், கல்லூரிகள் கோவில்கள் என்ற வேறுபாடு இன்றி பரவலான குண்டு வீச்சும், ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் காணலாம். இதுவரை வடக்கு - கிழக்கில் இப்படியொரு யுத்தம் நடக்கவில்லை. ஒரு சிறுபகுதி இவ்வளவு செறிவான தாக்குதலுக்கு உள்ளாகவில்லை.

கோட்டையைச் சுற்றியிருந்த விடுதலைப் புலிகளின் 'பங்கர்களே' (பதுங்கு குழிகளே) விமானப்படை விமானங்களினதும், கடற்படைப் பீரங்கிப் படகுகளினதும், இராணுவத்தினரின் பீரங்கிப்படைப் பிரிவினதும் பிரதான இலக்காக இருந்தன. இவ் இலக்குகள் தொடர்ச்சியாக பாரிய தாக்குதலுக்கு இலக்காயின. இத்தாக்குதலினால் கோட்டையைச் சூழவிருந்த கட்டிடங்கள் சில இடிந்து வீழ்ந்தன. பல பாரிய சேதத்திற்கு உள்ளாயின.

இந்நிலையிலும் விடுதலைப் புலிகள் தமது மனோபலத்தை இழக்கவில்லை. தொடர்ந்து இராணுவத்தினர்மீது தாக்குதலை மேற்கொண்டு தமது மனோபலத்தை நிலை நிறுத்திய அதேவேளை எதிரியின் மனோபலத்தைச் சிதறடித்தனர். யாழ்நகரைவிட்டு உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் ஓட்டம் எடுத்தனர்.

கைகட்டிப் பார்த்துக்கொண்டு நின்ற ஜே. வி. பியினரை வெட்டிக்கொன்று வெற்றிவிழாக் கொண்டாடிய இராணுவத்தினருக்கு நாங்கள் ஜே. வி. பி. அல்ல. விடுதலைப்புலிகள் - தமிழர்கள் – என்பதை உணர்த்தினர்.

'மழலைகள் பட்டாளம்' என்ற பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சனின் கேலிக்கும் தகுந்த பதிலடி கொடுத்தனர். 'மழலைகள் பட்டாளத்தால்' மனித பட்டாளம் துரத்தப்பட்டது.

## தேர்தல் திட்டம் தோல்வி

இரண்டு ஜேர்மனிகளும் ஒன்றிணைவதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கும் இன்றைய கட்டத்தில் அடுத்த டிசம்பர் மாதத்தில் நாடளாவிய பொதுத் தேர்தல்ஒன்றை நடத்தும் திட்டம் மேற்கு ஜேர்மன் அரசியல் சட்ட மன்றத்தின் தீர்ப்பு ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறப் போட்டியிடும் கட்சிகள் குறைந்த பட்சம் ஐந்து சதவிகித வாக்குகளைப் பெறவேண்டும் என்ற சட்டவாக்குச் சரத்தை நீதி மன்றம் நிராகரித்துள்ளது.

ஒன்றிணைந்த ஜேர்மனியில் சிறிய கட்சிகள் ஐந்து விழுக்காடு வாக்குகளைப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகலாம். எனவே அது தர்மமல்ல என்ற விவாதத்தை நீதி மன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதனால் டிசம்பர் மாதத்தில் தேர்தல் இடம் பெற வேண்டுமாயின் அக்டோபர் நடுப்பகுதிக்கு முன்பாக புதிய தேர்தல் சட்டங்கள்நிறைவேற்றப்படவேண்டும்

# முற்றுகையின் முடிவில்..

— பாலா —

''காலைக் கையில் எடுத்து வரும் நிலை வரலாம். அந்தப் பக்கம் செல்லாதே''

நண்பன் ஒருவன் என் காதுகளில் கிசு கிசுத்தான்.

பொம்மரின் இரைச்சல்- ஹெலிக்கொப்டரின் சடசடப்பு - எங்கேனும் ஒரு ஷெல் வெடிக்கும் சத்தம் கேட்டாலே பதுங்கு குழிக்குள் தஞ்சம் புகுவது என் சுபாவம்.

நண்பனின் எச்சரிக்கை என்னைத் திடுக்கிட வைத்தது. ஆனால் மறுகணமே ஹொண்டா 200 ஒன்று உறுமியபடி என்னை முந்திச் சென்றது.

— யாழ்.மண்ணின் அவலங்களின் மூலாதாரமாகத் திகழ்ந்த 'கோட்டை' இன்று அலங்கோலமான நிலையில் அனாதரவாகக் கிடக்கின்றது.

— நம்மின வரலாற்றின் பல கறைபடிந்த அத்தியாயங்களைத் தனதாக்கிக் கொண்ட கோட்டையின் இறுதி அத்தியாயங்களைக் கடந்த வாரம் 'விடுதலைப் புலிகள்' முடித்து வைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு புதிய பரிமாணத்தை தந்துள்ளார்கள்.

— 'கோட்டை'யை கோட்டைவிட்டு கொடியவர் அகன்ற பின்னர் கோட்டைப் பகுதி எப்படி உள்ளது?... வாருங்கள் பார்க்கலாம்.

''எதிரிகளின் பாசறையைத் தேடிச் செல்கிறோம். தமிழீழ மண்ணை மீட்டு வர ஓடிச் செல்கிறோம்'' என்ற பாடல் வரிகள் அந்த வாகனத்தைச் செலுத்தியவரின் உதடுகளிலிருந்து விடுபட்டு என் செவிப் பறையில் வந்து மோதியது.

இத்தனை காலமாய் தூங்காத விழிகளோடும் - சோர்வு காணாத உள்ளத்தோடும் துடிக்கின்ற உணர்வுகளோடும் காவல் கடமையில் ஈடுபட்ட விடுதலை வேங்கைகளின் உறைவிடம் நோக்கி மனம் விரைந்தது.

ஆரியகுளம் சந்தி கடந்து ஸ்ரான்லி வீதி வழியாக முட்டாஸ்கடைச்சந்திக்குப் போய் இடப்பக்கம் திரும்பி காங்கேசன்துறை வீதி வழியாக சத்திரச் சந்தி வரை வானம் பார்க்கும் கட்டிடங்களையும், உடைந்து நொருங்கிய கடைகளையும் பார்த்தபடி வந்தடைந்தேன்.

திருவள்ளுவர் சிலைக்குச் சமீபமாகச் சென்றுவிட்ட நேரம் 'உஸ் ...... உஸ் ...... அண்ணை எங்க போறியள்' என்ற குரல் நிறுத்தியது.

திரும்பினேன். விடுதலைப் புலிகளின் சீருடையில் ஓர் இளைஞன். கம்பீரம் அவன் நடையில் தெரிந்தது. தமிழர் அனைவரது தலைகளையும் நிமிர வைத்த பெருமை அவன் விழிகளில் சுடர்ந்தது. அவனிடத்தில் பேச்சுக் கொடுத்தேன். நான் கோட்டை வரை சென்று பார்த்துவர அனுமதி வேண்டும் எனக் கோரினேன். என்னைத் தாமதம் செய்யும்படி கோரியவன் எங்கோ விரைந்தான். திரும்பி வந்ததும் எனக்கு அனுமதி கிடைத்தது.

ஆஸ்பத்திரி வீதி வழியாக நடக்கலானேன். நவீனசந்தை தலை குப்புறக் கிடந்தது. பெரும்பாலான கடைகளினூடாக வானம் தெரிந்தது. கதவுகள் உடைபட்டுக் காணப்பட்டன. ஆஸ்பத்திரி முன்புறமாக தலையைத் திருப்பினால் கூரையில்லாத நிலையில் வீரசிங்கம் மண்டபத்தின் இடிபாடுகள் தெரிந்தன. மின்சாரசபைக் கட்டிடமும், ஆஸ்பத்திரியும், குண்டு வீச்சிற்கு தப்ப முடியவில்லை. மணிக்கூட்டு வீதியின் இரு மருங்கும் சரமாரியான குண்டு வீச்சிற்கு சாட்சியம் சொல்லின. அசோக் ஹோட்டலின் முன்புறத்தில் வீதியினருகே நாற்காலியில் இருந்த இருவர் அப்போதுதான் (நேரம் பி.ப. 4.00 மணி) பகலுணவைப் புசித்துக்கொண்டிருந்தனர்.

இவர்களைக் கடந்து முன்னைய பொதுசன நூல் நிலையத்தின் முன்புற வீதியால் நடந்து கொண்டிருந்தேன். நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பழமை வாய்ந்த மரங்கள் எரிந்தும், முறிந்தும், புதர் மண்டிப் போய்க் கிடந்தது முற்றவெளி மைதானம். வெட்ட வெளியாய் தெரிந்தது சுப்பிரமணியம்பூங்கா. கற்குவியலாய் காட்சி தந்தது முன்னைய மாநகரசபை - றியோ படமாளிகை–சிதைந்து நொருங்கிய நிலையில் மாவட்ட நீதி மன்றம்.

இத்தனை காட்சிகளும் கண்ணில் தெரிய – இத்தனை தாக்குதல்களுக்கும் ஈடுசொடுத்து கோட்டையின் வாசற் புறத்திலும் - சூழவும் முற்றுகையில் ஈடுபட்டிருந்த அந்த அஞ்சாத நெஞ்சத்தினரை - தூங்காத விழியினரை - திண்ணிய தோள்கொண்டோரை- அவர்களை எல்லாம் வழி நடத்தும் தளபதியை - தமிழரின் தேசியத் தலைவனை எண்ணியது நெஞ்சம்.

கோட்டையின் பிரதான வாசலுக்குச் சமீபமாக - பொலிஸ் நிலையம் இருந்த கட்டிடத்தின் முன்பாக கயிற்றாலான தடுப்பு இருந்தது. ஆனால் ஒருவாறாக இந்தத் தடையையும் தாண்டி கோட்டைக்குள் புகுந்துவிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. துரையப்பா விளையாட்டரங்கின் பவிலியனுக்கு கீழே ஒரு உலகமே இருந்தது. கோட்டையின் பிரதான வாசலுக்கு சமீபமாக இருந்த அரச மரத்தின் உச்சாணிக் கொப்பில் புலிக் கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

# பிரிட்டன் - ஈரான் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

(நியூயோர்க்)

பிரிட்டனுக்கும், ஈரானுக்கும் இடையே மீண்டும் உறவுகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டமுதல்நாளில் இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் பெரு நாட்டில் சந்தித்து உள்ளனர். லெபனானில் ஈரானிய ஆதரவுக் குழுக்களினால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பிரித்தானியரை விடுவிக்க வேண்டும் தெஹ்ரானில் 1985ஆம் ஆண்டு முதல் சிறையில் வாடும் பிரிட்டிஷ் பெண்மணி குறித்தும் பிரிட்டிஷ் அமைச்சரும் ஈரான் வெளிநாட்டமைச்சரும் விவாதித்து உள்ளனர். வளைகுடா நெருக்கடி குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாகத் தெரிகிறது.

## காஷ்மீரில் தீவிரவாதிகள் இராணுவம் கடும் மோதல்

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் வடமேற்குப் பகுதியான சுப்றோவிலும், யசியாபாத்திலும் இந்திய இராணுவம் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்துள்ளது. மூஸ்லிம் தீவிரவாதிகளுக்கும், பரா மிலிட்டரி துருப்பினருக்குமிடையே பலத்த மோதல் இடம்பெற்ற தேஊடங்கு பிறப்பிக்கப்படக் காரணம் எனத் தெரிகிறது.

இயந்திரத் துப்பாக்கிகள், றொக்கட் என்பன கொண்டு பிரிவினைவாதிகள் அரசபடை முகாம்களைத் தாக்கினர். இத் தாக்குதலில் அரசபடைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாக தெரிகிறது. பொது மக்கள் நெருங்கிவாழும் பகுதிகளாக அவை இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இத்தாக்குதலின் பின்னர் படையினரால் தேடுதல் ஏதும் நடத்தப்படலாம் என்று அஞ்சிப் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறியிருப்பதாகத் தெரிகின்றது.

இதேவேளை பாதுகாப்பு படையினரின் அத்துமீறல்கள், முஸ்லிம் அதிகாரிகள் அரச பதவிகளிலிருந்து நீக்கப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து நேற்று பொது வேலை நிறுத்தம் ஒன்று நடத்தப்பட இருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பகுதியில் கால வரையறை அற்ற ஊரடங்கு உத்தரவை பாதுகாப்புப்படையினர் அமுல்படுத்தி வீடு வீடாக தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பேராதனை, போலவலான ஆகிய ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளைச் சேர்ந்தவர்களின் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 3ஆம்திகதி மு. ப. 10மணியளவில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற உள்ளது.

## வடகொரிய வீரர்கள் வெளியேற்றப்பட்டனர்

வடகொரிய குத்துச்சண்டை வீரர்கள் பன்னிரண்டு பேரை ஆசிய விளையாட்டு விழா அதிகாரிகள் போட்டியிலிருந்து வெளியேற்றி விட்டனர். ஈரானிய குத்துச் சண்டை வீரர் ஒருவரையும் வடகொரிய பயிற்சியாளரும், போட்டியாளரும் தாக்கியதைத் தொடர்ந்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போட்டி நடந்து கொண்டிருக்கும் போதே இரு வடகொரிய வீரர்கள் மத்தியஸ்தரை தாக்கியதைத் தொடர்ந்து சீனப் பாதுகாப்புஊழியர்களையும் தாக்கியுள்ளனர். இதே வேளை வடகொரிய அணியினரின் வெளியேற்றம் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதொன்று என அகில உலக குத்துச்சண்டை வீரர்சங்கம் தெரிவித்துள்ளது

# முன்னாள் இந்திய துணைப்பிரதமர் தேவிலால்இராஜினாமா

(டெல்லி)

இந்தியாவின் முன்னாள் துணைப்பிரதமர் தேவிலால் லோக்சபாவிலிருந்து ராஜினாமா செய்துவிட்டார். நேற்றுக்காலை தேசிய முன்னணி அரசின் பார்லிமென்டறிக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் அக் கூட்டத்தை விட்டு வெளியேவந்த தேவிலால் தமது பதவி விலகல் பற்றிய அறிவிப்பை கூட்டத்திற்கு வெளியே காத்திருந்த பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். சபாநாயகருக்கு எழுதிய தமது இராஜினாமா பற்றிய கடிதத்தை பிரதமமந்திரி வி. பி. சிங்கிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் அங்குநின்ற பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

## ஒத்துழைக்க தயாராக இல்லை

இடஒதுக்கீடுபற்றி முடிவுகள் யாவும் அதனுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்தாலோசித்து எடுக்கப்படவில்லை, இதில் ஒரு பொதுக் கருத்தும் எட்டப்படவில்லை. இந்த முடிவுகள் தவறான காலப்பகுதியில் எடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

மேலும் தீக்குளிப்பு மற்றும் உடைமைகள் நாசம் செய்யப்படுதல் பற்றிய கவலைதரக்கூடிய விடயங்களில் கவனமின்றி சமுதாயத்தைத் துண்டாடக் கூடிய இந்தப் பிரச்சினைகளில் மிகவும் அலட்சியமாக இருக்கும் அரசுடன் நான் ஒத்துழைக்கத் தயாராக இல்லை என்றும் அவர் கூறிவிட்டார்.

## சந்திரசேகர் இடையே புகுந்தார்

செய்தியாளர்களுக்கு தேவிலால் தமது பதவி ராஜினாமா பற்றி கூறிக்கொண்டிருந்த சமயம் இடையே புகுந்த சந்திரசேகர்ஜனதாதளம் சிதறிப்போகாது இருக்க வேண்டுமானால் திரு தேவிலால் தமது லோக்சபா பதவியை ராஜினாமாச் செய்யக்கூடாது என அதே பத்திரிகையாளர்களுக்கு கூறினார். மேலும் அவர் நேற்றுக் காலையிலிருந்து நடந்துகொண்டிருந்த தேசியமுன்னணிக் கூட்டத்திலும் தாம் கலந்துகொள்ளவில்லை எனவும் கூறினார்.

## பார்லிமென்ரறி கட்சிக் கூட்டம்

பஞ்சாப்பில் இராஸ்டிரபதி ஆட்சி நீடிப்பு, ஜம்முகாஷ்மீர் நிலைமை, ராம ஜன்ம பூமி பாபர் மசூதி பிரச்சினை, ஆகியவற்றுடன் இட ஒதுக்கீட்டு எதிர்ப்பு கிளர்ச்சியால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றியும் இந்த ஆளும்கட்சி மாநாட்டில் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தியபார்லிமென்ரில்குறுகிய காலக்கூட்டத்தொடர் இன்று தொடங்குவதை முன்னிட்டு இந்த ஆளும்கட்சிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

---

## அல்லைப்பிட்டி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளிலிருந்து மின் உபகரணங்களும் சுவிட்சுகள் உட்பட உடுபுடைவை போன்றசகல பொருட்களும் களவாடப்பட்டிருக்கக்காணப்படுகிறது. வீட்டுப் பாவனைக்கான தளபாடங்கள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் எரிக்கப்பட்டுக் கிடக்கின்றன. (11)

---

## உயிர், உடைமை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் சகலரும் இது தொடர்பான முழு விபரங்களையும் தத்தமது பகுதி கிராம சேவகர்களிடமும், உயிரிழப்புக்களைத் தத்தமது பகுதி பதிவாளர்களிடமும் பதியுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இது விபரம் சம்பந்தமாக கடந்த ஜூன் மாதம் முதல் இன்றுவரை இவ்வாறான சம்பவங்கள் பற்றித் தமது பகுதிக் கிராம சேவகரிடம் யாராவது பதியாது இருந்தால் உடன் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது(24)

---

## வைத்தியசாலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரவும் அபாயம் உள்ளது.

சிலசிற்றூழியர்கள் மருத்துவர்களின் பணிப்புரைகளையே காதில் போட்டுக்கொள்வதில்லையாம். இதனால் கடந்த வாரம் மருத்துவர் ஒருவரே துப்பரவுப்பணிஒன்றைசெய்து முடிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது

சிற்றூழியர்களின் இந்தப் போக்கை இங்கு கடமையாற்றும் மேற்பார்வையாளர்களும் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். இதனால் மொத்தத்தில் நோயாளர்களே பெரிதும் கஷ்டப்படுவதாக பல நோயாளர்கள்கவலைதெரிவித்தனர்.

---

## தேசியக் கொடியை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரியவருகிறது.

இந்த தேசியக்கொடியின் கீழ் தான் இராணுவத்தினர் விசுவாசப் பிரமாணம் மேற்கொண்டவர்கள் என்பது தெரிந்ததே. (க)

---

## 45 நாட்கள்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லயத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர். விரைவில் தகுந்த சில விசாரணைகளின்பின் யாழ், நகரில் வைத்து இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவர் என அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த இருபத்தைந்து பேரது பெயர் விபரமும் வருமாறு. ஸ்ரன்லஸ்திக்கலஸ், மவுண்ட் காமல் ரோட் யாழ்ப்பாணம். பஞ்சலிங்கம் விஜேந்திரா, முத்துக்குமாரசுவாமி வீதி சுன்னாகம், மகாலிங்கம் சுரேஸ்குமார், ஊரெழுமேற்கு சுன்னாகம் சாம்பசிவம் ராஜன், முத்துக்குமாரசுவாமி வீதி, சுன்னாகம், துரைராஜா கருணாகரன், 512 கொக்குவில் மேற்கு கொக்குவில். கணபதிப்பிள்ளை பேரின்பராஜா, டச்சுறோட் உடுவில். சுப்பிரமணியம் முரளீதரன், குப்பிளான் ஏழாலை. கணேஸ் தங்கவேல், இடைக்காடு அச்சுவேலி. துரைராஜா சவுந்தரராஜா, தையிட்டி. வினாசித்தம்பி ராகவன், இடைக்காடு, தங்கராஜா சிவசுதன், இடைக்காடு அச்சுவேலி. கிட்டினபிள்ளை உதயகுமார். கலட்டி அச்சுவேலி. ராசையா கெங்காதரன், குப்பிளான் ஏழாலை. நடராஜா பிரபாகரன். இடைக்காடு ஏழாலை. ரட்ணம் ஜெயக்குமார், சரவணை மேற்கு வேலணை. கைலாசபிள்ளை கேசவன், கோப்பாய் வடக்கு கோப்பாய். சின்னத்துரை வீராமச்சந்திரன், இடைக்காடு அச்சுவேலி. கந்தசாமி சுரேஸ், இடைக்காடு அச்சுவேலி, நவரட்ணம் ரவீதரன், உடுவில் மேற்கு. குமாரசுவாமி துரைராஜா. அரியாலை மேற்கு. பத்மநாதன் அருள்ராஜா, மானிப்பாய் றோட் உடுவில். மகாராஜா மகாதரன், மானிப்பாய் றோட் உடுவில். தில்லையம்பலம் கந்தசாமி, மானிப்பாய் றோட் உடுவில். தம்பிராஜா செல்வராஜா, இடைக்காடு அச்சுவேலி. குமாரவேல் ரகீலன், கரணவாய் தெற்கு கரவெட்டி.

---

## போக்குவரத்து

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கும் சிங்கள அரசுடன் ஒத்துப்போகும் சில உளவாளிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்குடன்தான் நாம் இந்த ஒழுங்கு விதிகளை உருவாக்கி உள்ளோம். இந்த ஒழுங்கு விதிகளுக்கமைய நடந்து கொள்ளாது திருட்டுத்தனமாக குடாநாட்டை விட்டு வெளியேறும் செயலானதுதமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உபத்திரவம் தரும் ஒரு செயலாகும்.

இன்று விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் எமதுஒழுங்குவிதிகளை மீறி உள்ளனர் அவர்களை நாம் திடீர் சோதனை நடத்தியே பிடித்துள்ளோம். இவர்களைப்போல் இன்னும் ஒரு சிலர்வெளியேறமுற்படுவதால் நாம் தொடர்ந்து வீதிப்பரிசோதனைகளில் இறங்கவேண்டியவர்களாக உள்ளோம். இதனால் இத்தகைய செயல்கள் எமது போராட்டத்திற்கு ஒத்துழைப்புத் தரக்கூடியதாக அமையாது உபத்திரவம் தருவதாகவே உள்ளது என அவர் கூறினார்.

### கொழும்பு செல்வோர்

அவசியமாக கொழும்புசெல்வதற்கு பாஸ் பெறுபவர்கள் நூறு பேருக்கு ஒருநாளுக்கு நாம் பாஸ் வழங்குகின்றோம். கொழும்புக்குச் செல்வதற்கு பாஸ் பெறுபவர்கள் தாம் அங்கு செல்வதற்கான காரணத்தை ஆதார பூர்வமாக நிரூபிக்க வேண்டும். அதற்கான ஆவணங்களை எம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவைபின்பு திருப்பித்தரப்படும் எனவும் சலீம் கூறினார்.

### படகில் பயணிகள்

இவைதவிர கடல்வாரியாக படகு மூலம் செல்பவர்கள் படகு வெளிக்கிட்ட இடத்திற்கே அது திரும்பும்போது வந்து சேரவேண்டும் படகுகளில்,பாய்களில் குறிப்பிட்ட தொகைக்கு ஒருவர் கூட கூடுதலாக ஏற்றக்கூடாது. மக்கள் தாம் பெற்றுக் கொண்ட பாஸ்களுக்கு நாள் போய்விட்டதானால் உடன் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் இது உடனடியாக புதுப்பித்து தரப்படும்.

அண்மையில் எமது பரிசோதனையின்போது ஒழுங்கு விதிகளை மீறிய மூன்று படகுகள் எம்மால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்து, மலர், மடுதேவி ஆகிய மூன்று படகுகளும் நடுக்கடலில் வைத்து குறிப்பிட்ட பயணிகளிலும் கூடிய பயணிகளை ஏற்றிச் சென்றமையினாலும், திருட்டுத்தனமாக கரை இறங்கியமையினாலும்பிடிக்கப்பட்டன

### அனைத்தும் பறிமுதல்

நேற்று விடுவிக்கப்பட்டவர்களிடம் இருந்து அவர்களின் குற்றத்திற்காக அவர்கள் பாவித்த வாகனங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவ் வாகனங்கள் வருமாறு. மினிபஸ் ஒன்று இலக்கம் 30-6932, உழவு இயந்திரம் 25-9838, லான்மாஸ்டர் 70-9299, ஆட்டோக்கள் ஐந்து அவற்றின் இலக்கங்கள் 15-720, 16-0491, 16-2915, 16-6016, 17-0524 ஆகும்.

இத்துடன் இந்த வாகனங்களில் பயணம் செய்ய அழைத்துச் செல்பவர்கள் பயணிகளிடம் இருந்து பெருந்தொகைப் பணத்தை அறவிட்டுள்ளனர். அவர்களிடமிருந்தும் அறவிட்ட பணம் உட்பட தண்டமும் அறவிடப்பட்டுள்ளதாக திரு. சலீம் தெரிவித்தார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# மரண அறிவித்தல்கள்

## செல்வி கந்தையா இராசமணி

(இளைப்பாறிய தாதி, யாழ். அரசினர் வைத்தியசாலை கண் வாட்)

இடைக்காட்டைச் சேர்ந்த செல்வி கந்தையா இராசமணி 29. 9 90 இல் காலமானார். அன்னார் வல்லிபுரம் கந்தையாவும், பெண் தங்கம்மாவின் மகளும், சுப்பிரமணியம், வல்லிபுரம், திருமதி. பா. செல்லம்மா, திருமதி. ச. தங்கம்மா ஆகியோரின் சகோதரியும், பாலசுப்பிரமணியம், சண்முகநாதன், திருமதி. வ. சிவகாமி ஆகியோரின் மைத்துனியும், வசீகரன் (கனடா), ஜயசிறி, யசோதா, சுமதி, யசோதரன், தயாபரன், தங்கரூபி, இராசரூபி, செல்வரூபி ஆகியோரின் மாமியும், கோகுலச்செல்வன் கோகுலவாணி, கோகுலறஜனி, கோகுலறமணன் ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29 9.90 இல் இடைக்காட்டில் நடைபெற்றது. உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

"செல்வம்"
இடைக்காடு,
அச்சுவேலி.

தகவல்:
வ. பாலசுப்பிரமணியம்
(மைத்துனன்) R/683

---

## திருமதி நாகலட்சுமி பசுபதிச்செட்டியார்

காலஞ்சென்ற சிதம்பரநாதச்செட்டியார் பசுபதிச் செட்டியாரின் மனைவி திருமதி நாகலட்சுமி 30. 9. 90 ஞாயிற்றுக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மண்டைதீவு கணபதிப்பிள்ளையின் மகளும், காலஞ்சென்ற திரு திருமதி சிதம்பரநாதச்செட்டியாரின் மருமகளும், காலஞ்சென்றவிவாகப்பதிவுகாரரும், வெலியாத்து உத்தியோகத்தருமாகிய சி. பசுபதிச்செட்டியாரின் அருமை மனைவியாரும், திருமதி நித்தியகல்யாணி திருஞானசம்பந்தர், பாலசுப்பிரமணியம் (பாலன் இரும்புத் தொழிற்சாலை உரிமையாளர்), காலஞ்சென்ற செந்தில்நாதன், திருமதி மங்கையற்கரசி சிதம்பரநாதன், திருமதி கனகாம்பிகை இலங்கநாதன், திருமதி கெளரிநாயகி செந்தில்நாதன், செல்வி சாரதாதேவி ஆகியோரின் அருமைத்தாயாரும், காலஞ்சென்ற மாவட்ட காணி ஆணையாளர் க. திருஞானசம்பந்தர், திருமதிசெல்வரத்தினம்(கிராமசேவகர், சாவகச்சேரி), திரு. பொ. சிதம்பரநாதன்(யாழ்ப்பாணம் மாநகரசபை), திரு பொ. இலங்கநாதன் (உரிமையாளர், யுனைட்டெட் எஞ்சினியேர்ஸ்), திரு பொ. செந்தில்நாதன் (ஆசிரியர், வேலாயுதம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை) ஆகியோரின் மாமியாரும், திருமதி. சாந்தி சுந்தரலிங்கம், பசுபதீஸ்வரன்(ஜேர்மனி), கிரிஜா, பரமேஸ்வரன், சிவஜா, கீதரஞ்சினி, ஜெயரஞ்சினி, விஜயரஞ்சினி, சிவரஞ்சினி, ஜீவரஞ்சினி, கேதீஸ்வரநாதன், சிவசங்கரி, உமாசங்கரி, தேவகி, சிவதர்சினி ஆகியோரின் பேர்த்தியும், செல்விகள் தாரணி, தர்மினி ஆகியோரின் பூட்டியும், மண்டைதீவு முன்னாள் கிராம சபைத்தலைவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, கைலாசபிள்ளை, திரு க. கனகரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், தேஸ்ரன் கல்லூரி), திருமதி ராசலட்சுமி சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரியும், திரு சி சிவகுருநாதன் M A., திருமதி சிவகாமசுந்தரி நடராஜா, திரு சி. முத்துக்குமாரன், திரு சி. செ. சோமசுந்தரம் (ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது பூதவுடல் 1 10. 90 திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்ப்பாணம்இல.473, காங்கேசன் துறை வீதி இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக சோம்பயன்மணல்மயானத்துக்குஎடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
(R/685) ப. பாலசுப்பிரமணியம்

---

## மேஜர் குமுதனின்
# ஓராண்டு நினைவஞ்சலி

| | |
|---|---|
| ஓ குமுதண்ணாவே! | பார்தனை மீட்டிட |
| நீ நடந்தது வீட்டுக் | போர்புரியும் |
| தேவைக்கு வேலைதேடியல்ல | வீரர்தனுக்கு உணவளிக்க |
| நாட்டைக் காப்பாற்ற | உன்னுழைப்பால் உயர்ந்த |
| நாயகர்களை சேர்ப்பதற்கு | எம்வன்னி மண் |
| நீ பயிர் செய்தது | நிமிர்ந்து நிற்கின்றது |
| உன்வீட்டார் பசியாறவல்ல | நின்நினைவு பதிக்கின்றது |

## மேஜர் குமுதன்

(சரவணமுத்து தளையசிங்கம்)
(சேமமடு)

வீரமரணம் - 01 - 10 - 1989

B/1448 - நண்பர்கள்

---

## குருநகர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுக் கதவுகள் உடைத்துத் திருட்டு நடைபெற்றிருப்பதைப் பார்த்து வியக்க நேர்ந்துள்ளது.

---

## கூட்டம்

யாழ். மாவட்டத்தில் இருக்கும் உரம் கிருமிநாசினி விற்கும் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் நாளை காலை 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கு சமுகமளிக்கும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

இக்கூட்டத்தில் வடபகுதிக்கான உரக் கொள்வனவு பற்றி ஆலோசிக்கப்படவுள்ளது.